FIRST INFORMATION REPORT TAMIL NADU POLICE
முதல் தகவல் அறிக்கை INTEGRATED INVESTIGATION FORM-I

under Section 173 BNSS (Under Section 154 Cr.P.C.) C 8129809
கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்

1. District : **Tenkasi** Police Station : **Vigilance and Anti Corruption** Year: **2025** FIR No.: **08/2025** Date: **24.11.2025**
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as amended in Act 16 of 2018.** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : **24.11.2025** Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் **12.45 hrs** நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : **24.11.2025** Time : **16.00 hrs**
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) **24.11.2025** Time : **16.00 hrs**
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : **Written**
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: **Assistant Engineer office, TANGEDCO, V.K.Pudur, 25 Km North East**
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : **K.SELVA GANESH** (b) Father's/ Husband's Name : **Tr.KARUPPASAMY**
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth :**21.01.1997** (d) Nationality : **INDIAN** (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : **DRIVER** (g) Address : **7/73 Kamatchi Amman Kovil Street, Keela Veeranam, V.K.Pudur Taluk, Tenkasi District.**
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Prem Anand, Assistant Engineer, TANGEDCO, V.K.Pudur, Tenkasi District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 24.11.2025-ம் தேதி மாலை 16.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் C.ஜெயஸ்ரீ ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது தென்காசி மாவட்டம் வீ.கே.புதூர் தாலுகா கீழ வீராணத்தை சேர்ந்த திரு.K.செல்வ கணேஷ் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட வீ.கே.புதூர் மின்வாரிய மின் உதவி பொறியாளர் திரு.பிரேம் ஆனந்த் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்து, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 24.11.2025-ம் தேதி மாலை 17.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2025 u/s 7 of the PC Act 1988 as Amended in Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

K SELVA GANESH 24/11/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24/11/25 at 18:30hrs

Name: பெயர் C. JAYASREE
Rank: நிலை INSPECTOR OF POLICE

K.செல்வகணேஷ், வயது 30/25 த/பெ கருப்பசாமி, 7/73, காமாட்சி அம்மன் கோவில் தெரு. கீழ வீராணம், வீ.கே.புதூர் தாலுகா, தென்காசி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புதுறை, தென்காசி. ஐயா, நான் வீ.கே.புதூர் தாலுகா கீழ வீராணத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் முடிந்து இரண்டு பிள்ளைகள் உள்ளனர். நான் செந்திலாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் DME படித்து முடித்துள்ளேன். தற்போது டிராவல்ஸில் ஓட்டுநராக இருக்கிறேன். எனது தந்தையும் என்னுடன்தான் வசித்து வருகிறார். எனது தந்தை பெயரில் வீராணம் கிராமத்தில் சுமார் முக்கால் ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் நான்தான் விவசாயம் பார்த்து வருகிறேன். மேற்படி இடத்திற்கு எனது தந்தை 2009-ம் வருடத்தில் இலவச மின் இணைப்புக்கு எழுதி கொடுத்ததன்பேரில் 2020-ம் வருடம் இலவச மின் இணைப்பு வந்திருப்பதாக வீ.கே.புதூர் EB ஆபிசில் இருந்து சொன்னார்கள். அதற்கு போல் நடுவதற்காக ரூ.24,500/- கட்ட சொன்னதன்பேரில் நான் DD எடுத்து பணம் கட்டினேன். அதன்பிறகு போல் நட்டு இலவச மின் இணைப்பு கொடுத்தார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு வீ.கே.புதூர் EB ஆபிஸ் AE அவர்கள் எனது செல்போனில் பேசி எனது தந்தை பெயரில் உள்ள இலவச் மின் இணைப்புக்கு மீட்டர் வந்துள்ளது. அதனை மாட்டுவது சம்மந்தமாக அலுவலகத்திற்கு வரசொன்னார். அப்போது நான் நேரில் செல்ல முடியாத காரணத்தினால் எனது தந்தையை பார்க்க சொன்னேன். அவரும் AEஐ பார்த்துவிட்டு இடத்தின் பட்டா, EC, மோட்டார் பில், மோட்டார் போட்டோ எல்லாம் கேட்பதாகவும், ரூ.10,000/-மும் கேட்பதாக சொன்னார். நான் டிரைவராக வேலை பார்ப்பதால் வெளியூருக்கு அடிக்கடி சென்று விடுவேன். அதனால் நான் AEயை நேரில் சென்று பார்க்க முடியவில்லை. அவரும் என்னிடம் போனில் பேசி ஆவணங்களை கொண்டு வர சொன்னார். நான் என்னிடம் மோட்டார் பில் இல்லாததால் 18.11.2025-ம் தேதி காலையில் வீ.கே.புதூர் EB ஆபிசுக்கு சென்று AE திரு.பிரேம் ஆனந்த் அவர்களை பார்த்து அவரிடம் விபரம் கேட்டபோது அவர் உங்கள் அப்பாவிடம் எல்லா விபரங்களையும் சொல்லி அனுப்பினேன் என்று சொன்னார். நான் அவரிடம் எனது தந்தை மூணாறு எஸ்டேட்டில் வேலை பார்ப்பதால் அங்கு சென்று விட்டார். அதனால் என்னென்ன ஆவணங்கள் வேண்டும் என்பது பற்றி கேட்டேன். அப்போது அவர் கிணறு இருக்கும் இடத்தின் பட்டா, EC, மோட்டார் பில், மோட்டார் போட்டோ, LD அக்ரிமென்ட், டெஸ்ட் ரிப்போர்ட் ஆகியவை வேண்டும் என்றார். நான் அவரிடம் இலவச மின் இணைப்பு கொடுத்து 5 வருட காலமாகிறது.

தற்போது ஏன் மோட்டார் பில் எல்லாம் கேட்கிறீர்கள். மற்ற ஆவணங்கள் எல்லாம் ஏற்பாடு பண்ணிவிடலாம், மோட்டார் வாங்கிய பில் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் வேறு ஏதாவது கடையில் பில் வாங்கிகொடுங்கள் என்று சொல்லிவிட்டு, வீ.கே.புதூர் பஸ் ஸ்டாப் அருகில் உள்ள ராஜகலை பொதிகை சென்டரில் சென்று LD அக்ரிமெண்ட், டெஸ்ட் ரிப்போர்ட் வேண்டும் என்று சொன்னால் ரெடி செய்து தருவார்கள் என்றும், ஆவணங்களை கொண்டு வரும்போது ரூ.10,000/-மும் கொண்டு வாருங்கள் என்று சொன்னார். நான் போல் எல்லாம் நட்டு EB கணெக்சன் கொடுத்தாச்சே பின்பு எதற்கு பணம் என்று கேட்டதற்கு அவர் மீட்டர் மாட்ட நிறைய செலவுகள் உள்ளது என்று சொன்னார். 22.11.2025 ஆம் தேதி சுமார் 10.00 மணிக்கு மேற்படி சென்டருக்கு நானும் எனது அப்பாவும் சென்றோம். சென்டரில் இருந்த பெண்ணிடம் விவசாய இலவச மின் இணைப்புக்கு மீட்டர் மாட்ட LD அக்ரிமெண்ட், டெஸ்ட் ரிப்போர்ட் தயார்செய்ய வேண்டும் என்று கேட்டேன் அவர் EC மற்றும் சில ஆவணங்களை கேட்டார். நான் அவர் கேட்ட ஆவணங்களை கொடுத்ததும் அவரே 100 ரூபாய் பத்திரம் தயார் செய்தும் டெஸ்ட் ரிபோர்ட்டில் அவரே கைப்பட எழுதி எனது அப்பாவிடம் கைரேகையும், என்னிடம் சாட்சிக்கையெழுத்தும் பெற்றுக்கொண்டு என்னிடம் கொடுத்துவிட்டார். AE சொன்ன ஆவணங்களுடன் 24.11.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12.45 மணியளவில் வீ.கே.புதூர் EB ஆபிசுக்கு சென்று AE திரு.பிரேம் ஆனந்த் அவர்களை பார்த்து ஆவணங்களை கொடுத்தேன். அவர் அதனை வாங்கி பார்த்துவிட்டு சரியாக உள்ளது, நான் கேட்ட பணம் கொண்டு வந்திருக்கீறீர்களா என்று கேட்டார். நான் பணம் செலவாகிவிட்டது ஏதாவது குறைத்துக்கொள்ள கூடாதா என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.7,000/- கொடுங்கள் என்று சொன்னார். நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லையே என்று சொன்னதற்கு அவர் உங்கள் இடத்தில் உள்ள விவசாய மின் இணைப்புக்கு மீட்டர் பொருத்தினால்தான் மின் இணைப்பு முறையானதாகும். நீங்கள் நாளைக்கு ரூ.7,000/- கொண்டு வந்து கொடுத்தால்தான் மீட்டர் பொருத்துவேன், இல்லை என்றால் மின் இணைப்பை கட்செய்து விடுவேன் என்று கறாராக சொல்லிவிட்டார். நானும் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இலவச விவசாய மின் இணைப்பு பெற்ற பின்பு மீட்டர் வைப்பதற்கு லஞ்சமாக ரூபாய் 7,000/- பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனது தந்தை பெயரில் உள்ள இலவச விவசாய மின் இணைப்புக்கு மீட்டர் பொருத்த லஞ்சமாக ரூ.7,000/- கேட்ட வீ.கே.புதூர் மின்வாரிய AE

திரு.பிரேம் ஆனந்த் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd.24.11.2025 (SELVA GANESH).

Sir, Received the petition on 24.11.2025 at 16.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.08/2025 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 24.11.2025 at 17.00 hrs sd.C.Jayasree, Inspector of Police, V&AC, Tenkasi. 24.11.2025.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி நீதிமன்றம், தென்காசி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

C Jaya 24/11/25
C. JAYASREE
INSPECTOR OF POLICE
TENKASI V&AC